பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 30 வெள்ளிக்கிழமை 15.07.2022 கதிர் 141

## பொதுப் போக்குவரத்து கொழும்பில் வழமைக்கு

கொழும்பில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து பொதுப்போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று இடம்பெறுகின்றன.

கொழும்பு மாவட்டத்தில் நேற்று நண்பகல் 12 மணிமுதல் அமுலாக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம்இன்று அதிகாலை 5 மணிக்குநீக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து, கொழும்பில் பொதுப்போக்குவரத்துச் 2

# கோட்டாவின் விலகலை அறிவித்த யாப்பா பதில் ஜனாதிபதி ரணில் எனவும் தெரிவிப்பு



### நாளை கூடுகின்றது நாடாளுமன்றம்

கோட்டாபய ராஜபக்ஷ ஜூலை 14 ஆம் திகதி (நேற்று) அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதிப் பதவியை இராஜிநாமா செய்துள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று காலை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இராஜிநாமாக் கடிதம் எனக்குக் கிடைத்துள்ளது.

இதற்கமைய 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை சட்டரீதியாக இராஜிநாமா செய்துள்ளார்.

இதனால் புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யும் நடவடிக்கை அரசமைப்பின் பிரகாரம் முன்னெடுக்கப்படும்.

புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்படும் வரை 2

## இராஜதந்திர ரீதியில் கோட்டாவுக்கு உதவி

### மாலைதீவு அரசு அறிவிப்பு



இலங்கையில் ஏற்பட்ட கொந்தளிப்புநிலையை அடுத்து அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு, இராஜதந்திர ரீதியில் இடைமாறல் விசாவுக்கு ஏற்பாடுசெய்துகொடுக்கப்பட்டதுஎன மாலைதீவு அரசு 2

## கோட்டாவின் பெறுமதியை எதிர்காலத்தில் உணர்வீர்!

### நாட்டு மக்களிடம் 'மொட்டு' கூறுகின்றது

எதிர்காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷவின் மதிப்பையும் பெறுமதியையும் இந்தச் சமூகம் அறியும் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ இராஜிநாமா செய்தமை 2

## அரசை அமைக்கும் உரித்து இனி 'மொட்டு'வுக்கு இல்லை

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



எதிர்கால அரசை அமைக்கும் உரிமை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குக் கிடையாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 2

# பதில் ஜனாதிபதி பதவிப்பிரமாணம்

### பிரதம நீதியரசர் முன்னிலையில்



* புதிய ஜனாதிபதி 20 இல் தெரிவு
* 19 இல் வேட்புமனுத் தாக்கல்

**நாட்டு மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.**

**இன்று நண்பகல் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.** 2

## ஜனாதிபதி கொடியை இரத்துச்செய்த ரணில் 'அதிமேதகு' என்ற பதத்துக்கும் தடை விதிப்பு

நாட்டுக்கு தேசியக்கொடி மட்டும் போதும். ஜனாதிபதி கொடி இரத்துச் செய்யப்படுகின்றது.

- இவ்வாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பதில் ஜனாதிபதியாக இன்று நண்பகல் பதவியேற்ற பின்னர் ஆற்றிய விசேட உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது 'அதிமேதகு' என்ற சொற்பதத்துக்கும் தடை விதிக்கின்றேன் என்றும் ரணில் மேலும் குறிப்பிட்டார். 2

## அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஜூலை 20 வரைக்கும் விடுமுறை




அனைத்து அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரைவிடுமுறைவழங்கப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் பாடசாலைகளை மீள ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி 2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பதில் ஜனாதிபதி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ஒருவர் பதவி விலகிய பின்னர், பிரதமர் ஒருவர் பதவியில் இருந்தால் அவர் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்ற முடியும். அதன்படியே ரணில் விக்கிரமசிங்க இந்தப் பதவியை ஏற்றார். இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று காலை ஊடகங்கள் வாயிலாகத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்தப்படவுள்ளது.

இன்று காலை 10 மணியளவில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாளை நாடாளுமன்றத்தைக் கூட்டவும், அதன் பின்னர் 19 ஆம் திகதி வேட்பு மனுக்களைக் கோரி, புதிய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பை 20ஆம் திகதி நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி கொடியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, ஜனாதிபதியைவிளிக்கும்போது, இனி 'அதிமேதகு' என்ற வசனத்தைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற ஜனநாயகத்தை இல்லாதொழிக்க எந்தக் குழுவுக்கும் இடமளிக்கமாட்டேன்.

அரசமைப்புக்கு அப்பால் சென்று செயற்படத் தயாரில்லை.

அடுத்த வாரம் தெரிவாகும் புதிய ஜனாதிபதிக்கு '19' ஐ விரைவில் முன்வைக்கக் கூடியதாக இருக்கும்.

போராடும் உரிமை உள்ளது. வன்முறையை அனுமதிக்க முடியாது.

போராட்டக்காரர்களுக்கும், கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. போராட்டக்காரர்கள் சட்டத்தின் பிரகாரம் செயற்படுபவர்கள்.

நாம் வாழ்வதற்கும், அரசியல் செய்வதற்கும் நாடு அவசியம். எனவே, நாடு குறித்தும், மக்கள் பற்றியும் சிந்தித்துச் செயற்படுமாறு கட்சிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன். முதலில் நாட்டை மீட்போம். அதன் பின்னர் அரசியல் செய்வோம். - என்றார்.

## கோட்டாவின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அறிக்கையொன்றை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை வரலாற்றில் ஜனாதிபதி ஒருவர்பதவிக்காலம்நிறைவடைவதற்கு முன்னரே, பதவியை இராஜிநாமா செய்தது இதுவே முதன்முறை. அதற்கு நீண்டகால பொருளாதார நெருக்கடி, கொரோனா பரவல் உள்ளிட்ட காரணங்கே காரணமாக அமைந்தன.

30 வருடகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக பாதுகாப்புச் செயலாளராக பாரிய சேவையாற்றிய ஜனாதிபதியின் இன்றைய இந்தத் தீர்மானமானது அவர் நாட்டின் மீது கொண்டுள்ள அன்பையும் நாட்டுப் பற்றையும் வெளிக்காட்டுகின்றன.

எதிர்காலத்தில் உங்களது மதிப்பையும் பெறுமதியையும் இந்தச் சமூகம் அறியும் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை - என்றுள்ளது.

## அரசை அமைக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதிப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் ஆணையை இழந்ததைப் போலவே அவரது கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் மக்கள் ஆணையை இழந்துள்ளது.

எனவே, நாட்டின் எதிர்கால அரசை அமைப்பதில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினருக்குத் தமது நாடாளுமன்ற பெரும்பான்மையை உபயோகிக்கும் உரிமை கிடையாது - என்றார்.

## அனைத்துப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## இராஜதந்திர ரீதியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டில் இருந்து வெளியேறி மாலைதீவுக்குச் சென்று பின்னர் சிங்கப்பூரைச் சென்றடைந்தார்.

இந்தநிலையில், அவர் மாலைதீவில் தரையிறங்கியமை தொடர்பில், அந்த நாட்டின் எதிர்க்கட்சி கேள்வி எழுப்பியிருந்தது.

இதையடுத்து மாலைதீவு அரசு தமது விளக்கத்தை வழங்கியிருக்கின்றது.

இலங்கை அரசின் உத்தியோகபூர்வ கோரிக்கையின் அடிப்படையில் இலங்கையின் இராணுவ விமானத்தில் கோட்டாபய ராஜபக்ஷவும், அவரது பாரியாரும், இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளும் மாலைதீவுக்கு அழைத்துவரப்பட்டு பின்னர் சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என்று மாலைதீவின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## கோட்டாவின் விலகலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் பொறுப்புகள் மற்றும் கடமைகளைப் பதில் ஜனாதிபதி என்ற ரீதியில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கநிறைவேற்றுவார்.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும்நடவடிக்கைஎதிர்வரும்7நாள்களுக்குள் இடம்பெறும். இந்நிலையில், நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடவுள்ளது. அதில் கலந்து கொள்ளுமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## பொதுப் போக்குவரத்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் வழமை போன்று இடம்பெறுகின்றன என்று ரயில்வே திணைக்களமும், இலங்கைப் போக்குவரத்துச் சபையும் தெரிவித்துள்ளன.

எவ்வாறிருப்பினும், இடைக்கிடையே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுவதால், தனியார் பஸ் சேவைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காரியத்தில் கண் வை!

'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே' என்பது சினிமா பாடல்.

தென்னிலங்கையின் அரசியல் களேபரங்களில் அங்கு ஆரிய கூத்துத்தான் – பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் அதிகாரப் போட்டிக்கான கூத்துதான் – அரங்கேறி வருகின்றது. இந்த ஆரியரின் கூத்துக்கு மத்தியிலும் தமிழர்கள் தங்கள் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை முன்னிறுத்தி, அதை மட்டுமே நம்பி, ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, அந்தப் பேரினவாதத்தையே நிலை நிறுத்துவதில் துடிப்பாய் நின்ற கோட்டாபய ராஜபக்ஷ, அதே பௌத்த, சிங்களப் பேரினவாதத்தால் நாட்டையும் பதவியையும் விட்டு ஓட ஓட விரட்டப்பட்டிருக்கின்றார்.

இது, அவர் போஷித்த பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மையின் வீழ்ச்சி அல்லது பின்னடைவு என்று கருதுவோமானால் அந்த முடிவில் நாம் தப்பிழைக்கின்றோம் என்பதுதான் அர்த்தம்.

பௌத்த, சிங்களப் பேரினவாதப் பேரெழுச்சியைத் தாண்டி, கடுமையாகச் சுட்ட பொருளாதார அழுத்தங்களினால் எழுந்த கசப்புணர்வின் விளைவே கோட்டாபயவை நாட்டை விட்டுத் துரத்தச் செய்திருக்கின்றது.

அதனால் அரசியல் திருக்கூத்துகள் கொழும்பில் பல வடிவங்களில் கட்டவிழ்கின்றன. அவற்றில் நாட்டின் மக்கள் என்ற முறையில் தமிழர்களும் பார்வையாளர்களாகவும் பங்குபற்றுபவர்களாகவும் பங்களிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

இந்த அரசியல் திருக்கூத்தை நாம் நோட்டமிட்டாலும் அதில் மூழ்கிப் போய் விடக்கூடாது. நம் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும்.

தமிழர்கள் கண்ணாயிருக்க வேண்டிய காரியம் எது? தமிழ்த் தேசியத்தைப் பறி கொடுக்காது, போராடிப் பேணி நிலை நிறுத்துவதுதான் அது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்துவது தொடர்பாக இரண்டு கட்டங்கள் உள்ளன.

ஒன்று – உள்ளதை தக்கவைத்தல்.

மற்றது – மேலும் உரியதைப் பெற்றுக் கொள்ளுதல்.

தமிழர்களின் நீதியான, நியாயமான, கௌரவமான வாழ்வுக்குரிய அபிலாஷைகள் யாது என்பது தொடர்பில் தமிழர் பரப்புகளுக்கு இடையே பொது இணக்கப்பாடு உண்டு. சமஷ்டித் தீர்வு அடிப்படையில் அதிகார பரவலாக்கலை தமிழர் தாயகத்துக்குப் பெற்றுக்கொள்வதே தமிழ் மக்களின் அபிலாஷையாகும். அந்த அபிலாஷையின் கணிசமான பகுதிகள் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் எழுத்தில் பதியப்பட்டுள் ளன. அந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில், முன்னர் இணங்கப்பட்ட பல ஏற்பாடுகள் – குறிப்பாக பொலிஸ் காணி அதிகாரங்கள் – இதுவரை நடைமுறைப்படுத்தப்படவே இல்லை.

இந்த நிலையில் தற்போது அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு என்ற வகையில் புதிய அரசமைப்பு அவசர அவசரமாக உருவாக்கம் பெறும் சாத்தியங்கள் இடம்பெறுகின்றன.

அந்த அரசமைப்பு உருவாக்க விடயத்தில்தான் தமிழர் தரப்பு காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல் என்ற பெயரில் அவசர அவசரமாக கொண்டுவரப்படக்கூடிய புதிய அரசமைப்பு, அதிகார பகிர்வு என்ற பெயரில் தமிழர் காதில் பூ வைத்துக்கொண்டு 13 ஆவது திருத்த ஏற்பாட்டையும் ஏற்பாடுகளையும் நீக்கி, புதிய அரசமைப்பில் இந்தியாவின் – தமிழர்களின் – பங்களிப்பை அடியோடு ஒழிக்கும் முயற்சிகளை பேரினவாதம் தந்திரமாக மேற்கொள்ளலாம். ஆகையினால் இந்தச் சமயத்தில் தமிழர்கள் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும்.

# ஜனநாயக முறைமை ஊடாக ஆட்சிமாற்றம் அமையவேண்டும்

## அமெரிக்க, பிரித்தானிய இராஜதந்திரிகள் வலியுறுத்தல்

ஒட்டுமொத்த நாட்டினதும் சிறந்த எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தற்போதைய நிலைவரத்தைக் கையாளுமாறும் வன்முறைகளிலிருந்தும் அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துவதிலிருந்தும் விலகியிருக்குமாறும் அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக்கொள்வதாக அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஜனநாயக நிர்வாகம் மற்றும் சிறந்த எதிர்காலம் உள்ளிட்ட மக்களின் கோரிக்கைகள் அடைந்துகொள்ளப்படுவதற்கு ஜனநாயக மற்றும் அரசமைப்பிற்கு உட்பட்ட செயற்திட்டத்தின் ஊடாக அதிகாரங்கள் மாற்றப்படுவது இன்றியமையாததாகும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடுமையானபொருளாதாரநெருக்கடியின் விளைவாக நாடளாவிய ரீதியில் கிளர்ந்தெழுந்த மக்கள் போராட்டங்கள் படிப்படியாகத் தீவிரமடைந்துவந்த நிலையில், கடந்த வாரம் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து 13 ஆம் திகதியன்று தான் பதவி விலகுவேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்த நிலையில், அவர் நாட்டைவிட்டு வெளியேறினார்.

பிரதமராகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகவேண்டுமென வலியுறுத்தி ஏற்கனவே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவந்ததுடன் சில தினங்களுக்கு முன்னர் அவரது இல்லம் தீக்கிரையாக்கப்பட்ட பின்னணியில், பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்ட அவருக்கு எதிரான போராட்டங்கள் மேலும் வலுப்பெற்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பிலும் அதிகாரிகளும், பொதுமக்களும் செயற்படவேண்டிய விதம் தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஆகியோர் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கங்களில் செய்திருக்கும் பதிவுகளிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதன்படி இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் கூறப்பட்டிருப்பவை வருமாறு–

தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பொறுமையுடனும் அமைதியாகவும் செயற்படுமாறு ஏற்கனவே நாம் கேட்டுக்கொண்டதை மீளவலியுறுத்துகின்றோம். அதேவேளை ஒட்டுமொத்த நாட்டினதும் சிறந்த எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இந்த நிலைவரத்தை அணுகுமாறு அனைத்துத்தரப்பினரிடமும் கேட்டுக்கொள்வதுடன் நீண்டகால அடிப்படையில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதை முன்னிறுத்தி விரைந்து செயற்படுமாறும் வலியுறுத்துகின்றோம்.

மேலும் அனைத்து வகையிலுமான வன்முறைச்செயற்பாடுகளை நாம் கடுமையாகக் கண்டனம் செய்வதுடன் சட்டத்தின் ஆட்சி உறுதியான முறையில் நிலைநாட்டப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றோம்.

குறிப்பாக மக்களின் கோரிக்கைகளாக இருக்கக்கூடிய பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஜனநாயக நிர்வாகம் மற்றும் சிறந்த எதிர்காலம் என்பன அடைந்துகொள்ளப்படுவதற்கு ஜனநாயக மற்றும் அரசமைப்பிற்கு உட்பட்ட செயற்திட்டத்திற்கு அமைவாக அமைதியான முறையில் அதிகாரங்கள் மாற்றப்படுகின்றமை இன்றியமையாததாகும் என்று அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டின் நிலைவரம் தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அவரது ருவிட்டர் பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார் –

இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை உரியவாறு கையாள்வதற்கு சரியான நேரத்தில், அமைதியான முறையில், ஜனநாயகக்கோட்பாடுகளுக்கு அமைவாக அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு பிரிட்டன் தயாராக இருக்கின்றது. இது இலங்கை மக்கள் தற்போது முகங்கொடுத்திருக்கும் மிகநெருக்கடியான சூழ்நிலைக்குத் தீர்வுகாண்பதற்கு இன்றியமையாததாகும்.

மேலும் இதனை அடைந்துகொள்வதற்கு சட்டத்தின் ஆட்சி, அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை ஆகியவற்றுக்கு மதிப்பளிக்குமாறு அனைத்துத்தரப்பினரையும் கேட்டுக்கொள்வதுடன் அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதைத் தவிர்க்குமாறும் வலியுறுத்துகின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

# பிரதான வீதியை மறித்து பேசாலையில் போராட்டம்



மன்னாரில் நேற்று (வியாழக்கிழமை) லிற்றோ எரிவாயு விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பேசாலை கிராம மக்கள் பிரதான வீதியை மறித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நீண்ட காலமாக எரிவாயு இன்றி பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றறோம் எனவும், லிற்றோ எரிவாயு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் காரணமாக மேற்படி பிரதான வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பேசாலை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சு நடத்தினர்.

அத்துடன் பேசாலை கிராமத்திற்கு 100 லிற்றோ எரிவாயு கொள்கலன்களை பெற்றுத் தருகிறோம் என பொலிஸார் உறுதி அளித்ததைத் தொடர்ந்து மக்களின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்யா மீண்டும் ஏவுகணை தாக்குதல் குழந்தைகள் உள்பட 23 பேர் உயிரிழப்பு



உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த தொடங்கி 5 மாதங்களை கடந்துவிட்டது. ஆனால் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ரஷ்யாவின் மும்முனை தாக்குதலுக்கு உக்ரைனின் பெரும்பாலான நகரங்கள் சின்னாபின்னமாகிவிட்டன. இருந்தபோதிலும் உக்ரைன் வீரர்கள் அசராமல் எதிர்த்து போரிட்டு வருவதால் இன்னும் சில நகரங்களை பிடிக்க முடியாமல் ரஷ்யா திணறி வருகிறது. இந்தநிலையில், உக்ரைன் தலைநகர் கிவ்வில் இருந்து 268 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மத்திய பகுதியான வினிட்சியா நகரில் நேற்று ரஷ்யா தாக்குதலில் ஈடுபட்டது. அங்குள்ள முக்கிய அரசு அலுவலக கட்டடம் மீது சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் அந்த கட்டடம் மட்டும் அல்லாமல் அருகில் இருந்த குடியிருப்பு கட்டடங்களும் கடுமையாக சேதம் அடைந்தன.

இதில் கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன. இந்த தாக்குதலில் 3 குழந்தைகள் உள்பட 23 அப்பாவி பொதுமக்கள் இறந்தனர். 90க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களை பொலிஸார் மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதில், சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அடுத்தடுத்து 8 தடவை நடந்த ஏவுகணை வீச்சில் 50க்கும் மேற்பட்ட கார்கள் மற்றும் வாகனங்கள் தீயில் கருகி சேதமாகின. நேற்று முன்தினம் நடந்த சண்டையில் 5 பேர் இறந்தனர். ரஷ்யாவின் இந்த தாக்குதலுக்கு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார். பொதுமக்கள் மீது வேண்டுமென்றே குறிவைத்து இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளதாக அவர் குற்றம்சாட்டி உள்ளார்.

## பெற்ற குழந்தைகளின் கண் முன்னே மனைவியைக் கொன்றார் கணவன்

### பாகிஸ்தானில் பயங்கரம்



பாகிஸ்தானில் மனைவியை கொன்று தனது 6 குழந்தைகளின் கண் முன்னே, கொப்பரையில் போட்டு வேக வைத்த கணவனின் கொடூரச் செயல் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தானில் உள்ள கராச்சியில், குல்ன் இ இக்பால் பகுதியில் கடந்த 9 மாதங்களாக மூடப்பட்டுள்ள தனியார் பள்ளியின் காவலாளியாக பணியாற்றி வந்தவர் ஆஷிக், இதே பள்ளி வளாகத்தில் உள்ள குடியிருப்பில் இவர் குடும்பத்துடன் வசித்து வந்தார். இந்நிலையில், ஆஷிக்கின் 15 வயது மகள் நேற்று முன்தினம் பொலிஸில் ரத்தத்தை உறைய வைக்கும் புகாரை அளித்தார். அந்த சிறுமி சொன்ன இடத்துக்கு சென்ற பொலிஸார், சமையறையில் உள்ள கொப்பரையில் ஆஷிக்கின் மனைவி நர்கீசின் உடலை வெந்த நிலையில் மீட்டனர். முதல் கட்ட விசாரணையில், தனது 6 குழந்தைகளின் கண் முன்பே, நர்கீசை கொன்று கொப்பரையில் போட்டு வேக வைத்து ஆசிக் கொன்ற கொடூரம் தெரிய வந்தது. அவர் எதற்காக இவ்வளவு கொடூரமான கொலையை செய்தார் என்று தெரியவில்லை. இந்த அதிர்ச்சியில் இருந்து இன்னமும் மீளாத குழந்தைகள் 3 பேர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளனர். மற்ற 3 குழந்தைகளுன் ஆஷிக் தலைமறைவாகி விட்டார். அவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

## ஏர் இந்திய விமான குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டவர் சுட்டுக்கொலை



ஏர் இந்திய விமான குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டவர் கனடாவில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். சரே நகரில் ரிபுதமான் சிங் மாலிக்கை மர்மநபர் சுட்டுக் கொன்றார் என தகவல் வெளியாகியுள்ளது. குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து ரிபுதமான் சிங் மாலிக் உள்பட 2 பேர் விடுவிக்கப்பட்டனர்.

## புதிய பிரதமர் பதவி தேர்வு இங்கிலாந்தில் சுனாக் சூறாவளி; 2ம் சுற்றிலும் வெற்றி



இங்கிலாந்தின் புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கான முதல் சுற்று தேர்வில் இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனாக் 88 வாக்குகள் பெற்றதால், அடுத்த கட்டமாக 2வது சுற்றுக்கு முன்னேறி உள்ளார். இங்கிலாந்தில் பிரதமர் போரிஸ் ஜான்சன் பதவி விலகியதை அடுத்து, புதிய பிரதமர் செப்டெம்பர் 5ம் திகதி தேர்வு செய்யப்படுவார் என்று கன்சர்வேடிவ் கட்சியின் தேர்வு குழு அறிவித்தது.

புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கான போட்டியில், ஜான்சனுக்கு எதிராக முதலில் பதவியை ராஜினாமா செய்த நிதியமைச்சர் ரிஷி சுனாக், வர்த்தக அமைச்சர் பென்னி மோர்டன்ட், வெளியுறவு செயலர் லிஸ் ட்ரஸ் உள்ளிட்டோர் களத்தில் உள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்று வாக்கெடுப்பில் இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனாக் 88 எம்.பிக்களின் ஆதரவை பெற்று வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து 2வது சுற்றுக்கு அவர் முன்னேறினார். இந்த வாக்கெடுப்பில் 18 வாக்குகள் பெற்று கடைசி இடத்தில் உள்ள முன்னாள் அமைச்சர் ஜெரமி ஹண்ட், சுனாக்கிற்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளார். இந்நிலையில், நேற்று நடந்த 2வது சுற்று வாக்கெடுப்பில் சுனாக் 101 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

**வெற்றி பெற நினைப்பது ஏன்?**

முதல் சுற்று வெற்றிக்குப் பிறகு சுனாக் அளித்த பேட்டியில், 'விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதே முக்கிய பொருளாதார பிரச்சினையாக உள்ளது. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக வரிகளை குறைக்கவில்லை, வரியை குறைப்பதற்காக தேர்தலில் வெற்றி பெற நினைக்கிறேன். வரி குறைப்பை கவனத்துடனும், கட்டுப்பாட்டுடனும் செயல்படுத்துவேன்,' என்று தெரிவித்தார்.



## ட்ரம்பின் முன்னாள் மனைவி இவானா காலமானார்

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முதல் மனைவி இவானா (73). இவர் நியூயோர்க்கின் மன்ஹாட்டனில் உள்ள தனது இல்லத்தில் வசித்து வந்தார். ட்ரம்பின் முதல் மனைவியான இவானா 1992 ஆம் ஆண்டு ட்ரம்பிடம் இருந்து விவாகரத்து பெற்று பிரிந்து சென்றார். மேலும், இவர் டொனால்ட் ஜூனியர், எரிக் ட்ரம்ப் மற்றும் இவாங்கா ட்ரம்பின் தாய் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நியூயோர்க் பொலிஸின் அவசர உதவி எண்ணிற்கு வந்த அழைப்பின் பேரில் பொலிஸார் அங்கு சென்றுபார்த்தனர். அப்போது, அங்கு இவானா சுயநினைவின்றி கிடந்தார் எனவும், அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோது அவர் உயிரிழந்து விட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர் என நியூயோர்க் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவானா மரணத்தில் சந்தேகத்திற்குரிய வகையில் எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கை கிடைத்த பிறகே அவரது இறப்புக்கான கார ணம் தெரிய வரும் என பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு லடாக் பிரச்சினை தொடர்பாக இந்தியா - சீனா 16ஆவது சுற்றுப் பேச்சு



கிழக்கு லடாக்கில் இந்திய, சீன ராணுவ வீரர்களுக்கிடையேயான முறுகலால் இரு நாடுகளுக்குமிடையே மோதல் நீடித்து வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இரு நாட்டு ராணுவ அதிகாரிகள் மட்டத்தில் 15 சுற்றுப் பேச்சு நடந்துள்ளன. இதுவரை நடந்த பேச்சுகளின் பலனாக எல்லையில் சில சர்ச்சைக்குரிய பகுதிகளில் இருந்து இருதரப்பும் படைகளை திரும் பப்பெற்றன. எனினும் டெம்சோக், தேப்சாங் உள்ளிட்ட பகுதிகளில் படைகளை வாபஸ் பெற சீனா மறுத்து வருகிறது.

இந்த நிலையில் இரு தரப்பு ராணுவ அதிகாரிகள் மட்டத்திலான 16 ஆவது சுற்றுப் பேச்சு வருகிற 17 ஆம் திகதி நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சில் இந்தியா தரப்பில் ராணுவத்தின் 14ஆவது படைப்பிரிவு கமாண்டர் லெப்டினென்ட் ஜெனரல் அனிந்தியா சென்குப்தா பங்கேற்கவுள்ளார். கோக்ரா ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் உள்ள ரோந்துப் புள்ளி 15இல் இருந்து படைகளைத் திரும்பப்பெறுவதோடு, கிழக்கு லடாக்கில் அமைதியை உறுதிப்படுத்துமாறு சீனாவை இந்தியா வலியுறுத்தும் என இந்திய ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பன்னீர்செல்வத்தின் மகன்கள் உள்பட 18 பேரை நீக்கினார் எடப்பாடி பழனிசாமி



சென்னை வானகரத்தில் கடந்த 11ஆம் திகதி நடந்த அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனையடுத்து கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவு எம்.எல்.ஏக்கள் கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர். இருப்பினும் அவரது ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன்கள், 5 மாவட்ட செயலாளர்கள் உள்பட 18 பேர் நேற்று கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில், ஓ.பன்னீர்செல்வம் மகன்கள் அ.தி.மு.கவின் கொள்கை, குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கட்சியின் சட்டதிட்டங்களுக்கு மாறுபட்டு, கட்சியின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொண்டதாலும், கட்சியின் கண்ணியத்துக்கு மாசு ஏற்படும் வகையில், கட்சிக்கட்டுப்பாட்டை மீறி கட்சிக்குக் களங்கமும், அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், ஓ.பன்னீர்செல்வத்தின் மகன்களான ப.ரவீந்திரநாத் எம்.பி., வி.ப.ஜெயபிரதீப் உட்பட 18 பேர் கட்சியின்அடிப்படைஉறுப்பினர் பொறுப்பு உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கப்படுகிறார்கள், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை விமான நிலைய இரு ஓடுபாதைகளில் ஒரே நேரத்தில் விமானங்கள் இயக்கம்



சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இரு ஓடுபாதைகள் உள்ளன. முதல் ஓடுபாதை 3.66 கிலோ மீற்றர் தூரமும், இரண்டாவது ஓடுபாதை 2.89 கிலோ மீற்றர் தூரமும் கொண்டது. முதல் ஓடுபாதையில் பெரிய ரக விமானங்களும், இரண்டாவது ஓடுபாதையில் சிறிய ரக விமானங்களும் இயக்கப்படுகின்றன. தற்போது விமான சேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருவதால் அதற்கு ஏற்ப சென்னை விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து செயற்பாட்டை வேகப்படுத்த இந்திய விமான நிலைய ஆணையம் முடிவு செய்தது. இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் உள்ள இரு ஓடுபாதைகளையும் ஒரே நேரத்தில் பயன்படுத்துவதற்கான சோதனைகள் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளன.

இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் இரண்டு ஓடுபாதைகளை செயல்படுத்த விமான போக்குவரத்து ஆணையம் அனுமதி அளித்துள்ளது. அதைத்தொடர்ந்து சென்னைவிமானநிலையத்தில்நேற்றுமுதல்இருஓடுபாதைகளும் ஒரே நேரத்தில் இயக்கப்படுகின்றன.

சென்னை விமான நிலையத்தில் இதுவரை ஒரு மணி நேரத்துக்கு 36 விமானங்கள் இயக்கப்பட்டு வந்த நிலையில் இனி 50 விமானங்கள் வரை இயக்கும் திறன் கொண்டதாக மாறி உள்ளது. இதனால் சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் தரை இறங்கும், புறப்படும் செயற்பாடுகளில் அதிகமான தாமதங்கள் ஏற்படாது, என்று சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு கோவாவில் ஆதரவு திரட்டினார் திரௌபதி முர்மு



ஜனாதிபதித் தேர்தலில் பா.ஜனதா கூட்டணி சார்பில் போட்டியிடும் திரௌபதி முர்மு, இத்தியா முழுவதும் சுற்றுப்பயணம் சென்று ஆதரவு திரட்டி வருகிறார். அந்தவகையில் கோவாவில் பா.ஜனதா மற்றும் பா.ஜனதாவை ஆதரிக்கும் கட்சி எம்.எல்.ஏக்களின் ஆதரவைப் பெறுவதற்காக நேற்று அவர் கோவாவுக்கு சென்றார்.

அங்கே, பனாஜியில் உள்ள விடுதி ஒன்றில் மாநில பா.ஜனதா மற்றும் ஆதரவுக் கட்சிகளின் எம்.எல்.ஏ.எம்.பிக்களைச் சந்தித்து ஆதரவு கோரினார். குறிப்பாக, பா.ஜனதாவின் 20 எம்.எல்.ஏக்கள் மற்றும் மகாராஷ்டிரவாடி கோமந்தக் கட்சியின் 2 எம்.எல்.ஏக்கள், 3 சுயேச்சை எம்.எல்.ஏக்கள் மற்றும் எம்.பிக்களை அவர் சந்தித்துள்ளார்.



# நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கான வியூகம்; மூத்த தலைவர்களுடன் சோனியாகாந்தி ஆலோசனை

நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தாம் கைக்கொள்ளப்போகும் திட்டங்கள் தொடர்பான வியூகத்தை வகுப்பது குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர்களுடன் சோனியாகாந்தி ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்திய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர், வருகிற 18 ஆம் திகதி தொடங்ககவிருக்கும் நிலையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. டெல்லியில்நடைபெற்றஇந்தக்கூட்டத்துக்கு காங்கிரஸ்தலைவர் சோனியாகாந்திதலைமை தாங்கினார்.

கட்சியின் மூத்த தலைவர்களான மல்லிகார்ஜுன கார்கே, ப.சிதம்பரம், ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, ஜெய்ராம் ரமேஷ், கே.சுரேஷ், மாணிக்கம் தாகூர் ஆகியோர் கலந்து கொண்டனர். நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் என்னென்ன பிரச்சினைகளை முன்வைப்பதுஎன்றுஇதன்போதுஆலோசித்து முடிவு செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கிழக்கு ஆளுநருக்கு நிர்வாகம் தெரியாது!

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் விசனம்



(நூருல் ஹுதா உமர்)

மூவின மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட கூடிய – கிழக்கு மாகாணத்தை சேர்ந்த – ஒருவரே கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

அரசியல் நடப்புகள் தொடர்பாக நேற்று வியாழக்கிழமை கல்முனையில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு–

வட – கிழக்கு மாகாணங்களுக்கு 'பரசூட்'டுகளில் இருந்து ஆளுனர்கள் இறங்கி கொண்டிருக்கின்றார்கள். இவ்விதம் இறக்குமதி செய்யப்படுகின்ற ஆளுனர்கள் எதற்கும் அருகதை அற்றவர்களாகவும் உள்ளனர். அந்தந்த மாகாணங்களை சேர்ந்த பொருத்தமான நபர்களே வட கிழக்குக்கு ஆளுனர்களாக நியமிக்கப்பட வேண்டும். அவர்களுக்குதான் எமது மக்களின் பிரச்சினைகள் தெரியும், புரியும். அவற்றை தீர்த்து தர அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள். கோட்டாபய ராஜபக்ஷவால் ஆளுனர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பதவிகள் உடனடியாக வெறிதாக்கப்பட்டு பொருத்தமான புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் போன்றவர்களுக்கு நிர்வாகம் தெரியாது என்பது இன்னுமொரு விடயம். கிழக்கின் ஆளுனராக இதே மாகாணத்தை சேர்ந்த – மூவின மக்களாலும் ஏற்று கொள்ளப்பட கூடிய – ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

# மட்டக்களப்பு மாநகருக்குள் குறுந்தூர பேருந்து சேவை!



(க.கிருபாகரன்)

எரிபொருள் தட்டுப்பாட்டினால் அன்றாடப் போக்குவரத்துச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது சிரமங்களை எதிர்நோக்கி வரும் பொதுமக்களின் நன்மை கருதி, மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் நேற்று தற்காலிகமாக குறுந்தூர பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எரிபொருள்தட்டுப்பாடுமற்றும்தொடர்ச்சியான எரிபொருள் விலையேற்றம் காரணமாக ஓட்டோ உள்ளிட்ட பிரயாண சேவைகள் மிகக் குறைந்தளவிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றிற்கான வாடகைக் கட்டணங்களும் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக உள்ளகப் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளன. நோயாளர்கள், மாணவர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள், தினக் கூலித் தொழிலாளர்கள் எனப் பலர் தமது போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையைக் கருத்திற் கொண்டு சுஜித் லியோன் லோறன்ஸ் எனும் தனிநபரின் ஊடாக இந்தக் குறுந்தூர பஸ் சேவை தற்காலிகமாக மட்டக்களப்பு மாநகர சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

அவரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், அருட்தந்தை தேவதாசன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன், மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் நா.மதிவண்ணன், மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஷ், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி சேவைக்கான ஒருவழிக் கட்டணமாக பொதுமகன் ஒருவரிடமிருந்து ஐம்பது ரூபாவும், பாடசாலை மாணவர்களிடமிருந்து நாற்பது ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

இச்சேவையை நவீன தகவல் தொழில்நுட்பத்துடன் பொதுமக்கள் கையடக்கத் தொலைபேசியினூடாக கண்காணித்துக் கொள்ளும் வசதிகளும் நிறுவப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பார் வீதியிலிருந்து ஆரம்பமாகும் இச்சேவையானது பிரதான வீதியூடாகச் சென்று, வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை, கோவிந்தன் வீதி, பஸ் நிலையம், திருமலை வீதிகளூடாகச் சென்று ரயில்நிலைய வீதி மற்றும் எல்லை வீதியூடாக மீண்டும் பார்வீதி வழி சென்று கீரிமடு சித்திவிநாயகர் ஆலயம் வரையில் சேவையில் ஈடுபடவுள்ளதாகவும் மாநகர முதல்வர் மேலும் தெரிவித்தார்.



# அம்பாந்தோட்டை ஆழ்கடலில் தத்தளித்த வாழைச்சேனை மீனவர்கள் மூவரும் மீட்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

அம்பாந்தோட்டை ஆழ்கடலில் தத்தளித்த வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் எனத் துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த 9 ஆம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க இயந்திரப் படகில் மூன்று மீனவர்கள் சென்றிருந்தனர். படகின் இயந்திரம் பழுதடைந்ததால் மூன்று மீனவர்களும் அம்பாந்தோட்டைக் கடற்பரப்பில் தத்தளித்துள்ளனர்.

மூன்று மீனவர்களும் கப்பல் ஒன்றினால் நேற்று மீட்கப்பட்டு, காலி துறைமுகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் சென்ற 34 அடி நீளமான இயந்திரப் படகைக் கரைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரு கின்றது.



# மீண்டும் சமையல் எரிவாயு மட்டக்களப்பில் வழங்கல்

கடந்த ஒன்றரை மாதத்துக்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் சமையல் எரிவாயு நேற்று விநியோகிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, காத்தான்குடி மற்றும் கல்லடி போன்ற பிரதேசங்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 4,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கொண்டு வரப்பட்டு, ஒரு குடும்ப அட்டைக்கு ஒன்று வீதம் பிரித்து வழங்கப்பட்டன.

காத்தான்குடி, ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் வைத்து காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதய ஸ்ரீதர் முன்னிலையில் சமையல் எரிவாயுகள் இவ்வாறு விநியோகிக்கப்பட்டன.

இதன்போது பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர்.

# அண்டவெளியில் கிரகத்தை தேடுகின்றாரா கோட்டாபய?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பயண முடிவு செவ்வாய் கிரகத்திலா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

பதவி விலகல் கடித்தை அனுப்ப வேண்டுமா யின் பயண முடிவுக்கு செல்ல வேண்டும் எனக்கூறி ஜனாதிபதி ஏன் காலம் தாழ்த்தி வருகிறார். உலகில் மூலைக்கு செல்ல அவருக்கு போதுமான காலம் இருக்கின்றது. இலங்கையர்கள் இருக்கும் எந்த நாட்டுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செல்ல முடியாது.

அண்டவெளியில் வேறு கிரகத்தை தேடுவதன் காரணமாகவே ஜனாதிபதி பதவி விலகல் கடிதத்தை அனுப்ப தாமதித்து வருகின்றாரோ என்ற நியாயமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ, சிங்கப்பூருக்கு சென்ற பின்னர் அங்கிருந்து தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்புவார் எனக் கூறப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி சிங்கப்பூர் செல்வது தாமதமாகியுள்ளது. சிங்கப்பூர் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான எஸ்.எஸ்.437 விமானத்தில் ஜனாதிபதி மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் புறப்படவிருந்தார்.

பாதுகாப்பு சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அந்த பயணம் நிறுத்தப்பட்டது. ஜனாதிபதியும் அவரது மனைவியும் மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் செல்விருந்தனர்.

இந்த நிலையில், ஜனாதிபதி மாலைதீவில் இருந்து தனிப்பட்ட விமானத்தில் சிங்கப்பூர் சென்றிருந்தார்.





# கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கும் நீண்ட நாள்களின் பின் எரிவாயுக்கள்!

கிளிநொச்சியில் நீண்ட நாள்களின்பின் எரிவாயு விநியோகம் இடம்பெற்றுள்ளது.

லிற்றோ எரிவாயு சிலிண்டர்களே நேற்று (வியாழக்கிழமை) விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிளிநொச்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அத்துடன் கொண்டுவரப்பட்ட சிலிண்டர்களானவை விநியோகஸ்தர் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 600 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு சமையல் எரிவாயு விநியோகம் நடைபெற்றுள்ளது.

பொதுமக்கள் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக் கொள்ள அதிகாலை வேளையிலிருந்து வரிசையில் காத்து நின்றுள்ளனர்.

பின்னர், நீண்ட நேர வரிசையில் காத்திருந்து எரிவாயுவைப் பெற்றுச்சென்றுள்ளனர்.

எனினும், எரிபொருள் பற்றாக்குறையால் எரிவாயுவைப் பெறுதலிலும், பெற்ற எரிவாயுவைக் கொண்டு செல்வதிலும் மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கியுள்ளனர்.

எரிவாயுக்களை தாங்கிய ஊர்தி ஒன்றின் மூலமே நேற்று (வியாழக்கிழமை) மக்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இவை அரச உத்தியோகத்தர்களுக்கும் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முல்லைத்தீவு நகர மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு 248 எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் 400 எரிவாயு சிலிண்டர்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நகரை அண்டிய மக்களுக்கு குடும்ப அட்டையின்படி ஒன்று வீதம் இந்த எரிவாயு விநியோகம் இடம்பெற்றுள்ளது.

# ரணிலின் வீடு எரிப்பு பின்னணியில் சஜித்!

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்டதன் பின்னணியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ செயற்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்வதே சஜித் பிரேமதாஸவின் திட்டமாக இருந்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற கடந்த 9 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் வைத்தியசாலையில் இருந்தாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டு எரியூட்டும் நடவடிக்கையை அவர் செயற்படுத்தி இருக்கிறார் என்பது கிடைத்திருக்கும் ஆதாரங்கள் மூலம் தெளிவாகின்றன. சஜித் பிரேமதாஸ வைத்தியசாலையில் இருந்துகொண்டு, ஒரு குழுவினர் ஊடாகவே இந்த மோசடி நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை சேதப்படுத்த இவர்கள் செல்லவில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்வதே அவர்களின் திட்டமாகும். என்றாலும் அந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியாரும் வீட்டில் இருக்கவில்லை. அதனால் அவர்கள் வீட்டை எரியூட்டிக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

அத்துடன் சஜித் பிரேமதாஸவின் கோரிக்கைக்கு அமைய செயற்பட்ட இவர்கள், ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் இருந்த தேஸ்டன் கல்லூரிக்கு அருகில் இருந்தே அனைத்து நடவடிக்கைகளையும் செயற்படுத்தி இருக்கின்றமை, வீடியோ பதிவுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. என்றாலும் ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்வதே சஜித் பிரேமதாஸவின் திட்டமாக இருந்துள்ளது. – என்றார்.

# நீண்டநாள்களுக்குப் பின்னர் நேற்று நுவரெலியாவுக்கு லிற்றோ எரிவாயு!








நாட்டில் கடுமையான தட்டுப்பாடாக காணப்பட்ட லிற்றோ எரிவாயு நேற்று (வியாழக்கிழமை) நுவரெலியா மக்களுக்கு வழங்கப்பட்டது.

நுவரெலியா பிரதான நகரத்தில் காணப்படும் லிற்றோ எரிவாயு விநியோக நிலையங்களுக்கு சுமார் ஒரு மாதத்துக்கு மேலாக லிற்றோ எரிவாயு விநியோகம் நடைபெற்றதால் பொதுமக்கள் அதனை பெற்றுக் கொள்வதற்கு அதிகாலையில் இருந்து நீண்ட வரிசையில் நின்று பெற்றுச் சென்றனர்.

லிற்றோ எரிவாயு நிறுவனத்தால் நேற்று வழங்கப்பட்ட 120 லிற்றோ எரிவாயு கொள்கலன்கள் கடைகளுக்கு வழங்கப்பட்டன எனவும் அவற்றை வரிசையில் காத்திருந்த அனைத்து வாடிக்கையாளர்களினதும் தேவைக்கு ஏற்ப சமையல் எரிவாயுவை வாழங்க முடியாத நிலை ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2022இல் வெளியிடப்பெற்றது.